2017 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

ஜவுளிப் பூங்கா

***2688—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கோரியுள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், குளச்சல் தொகுதி, பள்ளியாடி கிராமத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன் வருவார்களாயின், இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட பள்ளியாடி*

கிராமத்தில் சுமார் 1500–க்கும் மேற்பட்டவர்கள் கைத்தறி, நெசவுத் தொழில் செய்பவர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தினை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சுமார் 20000 பேர் இந்தப் பணிகளைச் செய்து பிழைக்கிறார்கள். வேறு வழிகள் இல்லை. இந்தப் பணியை செய்துதான் அவர்கள் பிழைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கின்றது. எனவே, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

முற்பகல் 10–50

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் சுருக்கமாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் விரிவாகப் பேசாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: 50 கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இப்பொழுது இயக்கத்தில் உள்ளன. முன்பு 90 இருந்தன. பள்ளியாடி, திங்கள்நகர், குளச்சல், வடசேரி, உண்ணாமலைக்கடை, தேங்காப்பட்டணம், பூட்டேற்றி, கருங்கல் ஆகிய இடங்களில் கைத்தறி ஜவுளித் தொழிலை நம்பித்தான் இருக்கிறார்கள். ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Subject பேசாதீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, தொழில்முனைவோர்கள் முன்வந்தால் ஜவுளிப் பூங்கா அமைக்கலாம் என்று சொல்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதில் எவ்விதமான வரைமுறைகள் இருக்கின்றன, யார் மூலமாக செய்வது என்பதைத் தாங்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன கேட்கிறது? Subject பேசுவதா?

2017 ஜூலை 5]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைப்பது தொடர்பாக 30–9–2011 மற்றும் 1–11–2011 ஆகிய தேதிகளில் அப்போதைய கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களுக்கு வருகைத் தந்த 14 ஆர்வமுடைய தொழில்முனைவோர்களிடம் அனைவரும் ஒரு குழுவாகச் செயல்பட்டு, உரிய பிரேரணையை அரசிற்கு சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இக்குழுவின் தலைவராகச் செயல்பட்ட கன்னியாகுமரி மாவட்ட மீன் வள வர்த்தக அமைப்பின் தலைவர் திரு. ஷாஜஹான் அவர்களுக்கு 5–7–2012, 24–9–2012, 19–2–2013 மற்றும் 19–7–2013 ஆகிய தேதிகளில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பின்வரிசையில் சச்சரவு நடப்பதுபோல் இருக்கிறது. அமைதியாக இருங்கள். சச்சரவு நடப்பதுபோல் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதை என்னவென்று பாருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: கடிதங்கள் வாயிலாகவும், நேரடியாகவும் கேட்டுக்கொண்டதன் பிறகும் தொழில்முனைவோர் பிரேரணை சமர்ப்பிக்காத காரணத்தினால், பள்ளியாடி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க இயலவில்லை என்பதையும், தொழில்முனைவோர் முன்வருவார்களாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுருக்கமாக தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், இந்த அரசு ready, நீங்கள் ready-யா என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள். Subject பேசக் கூடாது. கேள்வி என்ன கேட்க வேண்டுமோ, கேளுங்கள். நீங்கள் பேசுங்கள். நேரமாகிறது. மற்றவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நாங்கள் ready, நீங்கள் ready-யா என்று கேட்டார்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் வழிமுறைகள் சொன்னால் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு pension ரூ.1,000/– கொடுத்தீர்கள். அதை ரூ.2,500/– ஆக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரூ.15 கோடிக்கு மேல் நெசவாளர்களுக்கு வழங்க வேண்டிய rebate பணத்தை வழங்காத காரணத்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை வழங்க முன்வருவீர்களா என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான மற்றொரு கேள்வி. பள்ளியாடி அருகில், கஞ்சிக்குழி பகுதியில் கைத்தறி நெசவு சம்பந்தமான ஓர் ஆலை கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு வழி செய்வீர்களா என்பதைத் தாங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தள்ளுபடி தொகை வழங்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அன்பரசன் அவர்கள் இங்கே பேசுகிறபோதுகூட அதைத் தெரிவித்தார்கள். இந்த தள்ளுபடி சுமை என்பது கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற ஒன்று. இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்போடு, அவர்களுடைய நலன் கருதி தாராளமாக வழங்கி வந்துகொண்டிருக்கிறது. இருப்பினும், தொகை நிலுவையில் இருக்கிறது என்பது உண்மை. மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆய்வு செய்தபொழுது, நிலுவைத் தொகையில் 100 கோடி ரூபாயை இந்த ஆண்டு வழங்க முன்வந்திருக்கிறார்கள் என்கிற நற்செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.